716

REGISTRAR'S OFFICE 29 FEB MADRAS

சிவமயம்

வேலுமயிலுந்துணை.

காவடிச்சிந்து, சதார கள்ளப்பாட்டுத்
தெம்மாங்கு, தொண்டிச்சிந்து,
கும்மி, பாஸ்கரன் டிராமா
வர்னமெட்டுகளடங்கிய
அற்புதத் திருச்செந்தூர் சுப்பிரமணியர்

# இன்பரசக்
# கீர்த்தனைப்பதங்கள்

716 / 1.16

முதற்பாகம்.

இவை
திருமந்திரநகரெனும் தூத்துக்குடி
புஸ்தகவியாபாரம்,

## வே. சி. சாமிதாசனுலியயர்ற்றி

ஷியாரால்

விருதுபட்டி ஸ்ரீமான்
இராமலிங்கக்குருக்கள் அவர்களது
...ஞானந்த அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

R26-417 N16 17761

1916 [அணா—1.

# திருச்செந்தூர் சுப்பிரமணியர் இன்பரசக் கீர்த்தனாமிர்தங்கள்.

## கணபதி துதி வெண்பா.

வாசமுறுஞ் செந்தூர் வடிவேல வன்கிருபை
தேசமெங் கும்பரவத் தேவரொடு—நேசக்
கணபதியைத் தான்பணிந்து கந்தனருள் பாதங்
குணமதிகமாய்ச் சொல்வேன் கொண்டு.

இராமமணி பிரணத பாலா என்றதில் பின் முடுகு.
இராகம் - கல்யாணி - தாளம் - ரூபகம்.

### பல்லவி.

ஆதிவோங் குரு வான நாயகா
அருள் செய் அருள் செய் அருள் செய் அருள்செய். (ஆதி)

### அனுபல்லவி.

சோதி சின்மய மான தாயகா
சித்தத் தொடு நித்தந் துதி பக்தற்கருள் முத்தே புவி (ஆதி)

### சரணங்கள்

பாதியணி சிவனருளும் பாலா
பக்திசாமி தாசனுக்குயர் மேலா
நீதியதாய் வரந்தருவாய் சீலா
நேசத்தொடு பேசத்திரு வாசத்தொடு வீசக்கொடும் (ஆதி)

## சரஸ்வதி துதி.

(2) சோமசேகர னருளும் பாலா வேலா என்ற மெட்டு.
இராகம் - தேசிக - தோடி - தாளம் - ஆதி.

### பல்லவி:

தண்டாமரையில் வளர் தாயே ஆயே யிது
தருணமெனக் கருள்புரிகு வாயே நீயே வுயர் (தண்)

### அனுபல்லவி.

பண்டாதி தேவர்களைத் தேடினேனே யானும்
பலநாளும் நொந்துருகி வாடினேனே உனைக்
கொண்டாடி யனுதினமும் நாடினேனே சிறு
குழந்தையுந் துதிகள்செய்து பாடினேனே அம்மா (தண்)

அன்பர்கள் உள்ளஞ் சிறந்த ஆணி வாணி வுன்
தடியிணைய யான்றொழுது பேணி ஊணி வெகு
இன்பமுடன் பாடிடவே பாணி வேணி உன்
னிருதய மருள்புரி கல் யாணிராணி அந்தத் (த)

சதுர்முகன் நாவில் வசிக்குஞ் சத்தி சித்தி பாதஞ்
சரணமென்று யான் பணிந்தேன் புத்தி நத்தி கல்வி
மதுரமென நாவிலருள் பத்தி சுத்தி யிந்த
மண்டலம் புகழுதிக வெத்தி முத்தி தாருந் (த)

தேசம் புகழ் சரஸ்வதியே தேதி சேதி சற்றுந்
தெரியாதவன் பாடுகிறேன் பாதி நீதி செந்தூர்
வாசன் குமரேசன் பதம் கியாதி வோதி சாமி
தாசன் நாவிலருள் புரிவாய் ஆதி சோதி வருவாய் (௧)

(3) சுப்பிரமணியர் துதி விருத்தம்.

பலநாளும் நானுனது பாதமே கதியென்று
பக்தியோ டோர் மன மதாய்
பகலிரவு மலர்கொண்டு அர்ச்சித் தருள்ப்பதம்
பணிந்திடு மன்ப னெனையும்
விலகாது கார்த்திட வடியேனுக் கருளிரங்க
வேண்டு மென் கலி தீரவே
வெற்றிவடி வேலனே சத்தியுமை பாலனே
வேண்டு வோர்க்கதி சீலனே
தலமான கண்டி கதிர்காமம் வடகாசியும்
தனுஷ்கோடி குற்றாலமும்
தாலமதிலே புகழ்தென் மதுரையில் பழனி
தருசூழ் பரங் குன்றமும்
வலமதாயக் கழுகுமலை குன்றக்குடிச் செந்தூர்
மனமகிழ்வ தாக வுற்றாய்
வாசமிகு சாமிதாசனுக் கருளெனக்கு மருள்
மயிலேறும் குமரேசனே.

(4) தந்தானம்மடி தந்தானம்மடி என்ற மெட்டு.

இராகம் - இந்துஸ்தானி - தோடி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

தேச தேசந்தனில் சிறந்த
திருச்செந்தூர் கந்தா அன்பர்க்குத்
திருவருள் தந்தா யாவர்க்குங்
குருவென வந்தா தமிழ்தி
தெரியா தவன்பாடுகிறேன் தேசிகா வந்தாள்நிதமும்
தேசிகா வந்தா ளென்னுவில் தேசிகா வந்தாள்
நேசபாச முட னடியேன்
நிதமுந் துதி செய்தேன் உனையே
நிதமுந் துதி செய்தேன் அடிக்கடி
நிதமுந் துதி செய்தேன் எங்கும்
வாசமுறுஞ் சண்முகா நீ வரமருள்வாயே எனக்கு
வரமருள் வாயே சகல வரமருள்வாயே
நாவதனுல் பாடித் தேடி
நான் துதித்தேனே கந்தய்யா
நான் துதித்தேனே வேலய்யா
நான் துதித்தேனே யெனைக்

காவா யிநுசமயங் கருணை தந்தருளே குருவே
கருணை தந்தருளே மருவே கருணை தந்தருளே
ஆவலேவலாக் கானகம்
மன்று சென்றவா வள்ளியம்ம
ஹைசை கொண்டவா நன்று மணம்
மென்று கொண்டவா உன
தடிமையான சாமிதாசன் உள்ளம்நின்றவா பக்தர்கள்
சள்ளைவென்றவா யெனக்கருளன்பூண்டவா பாண்டி(தேச)

கார்த்திகேயக் குமரய்யா என்ற மெட்டு.

(5) இராகம் - கமாசு - தாளம் - ரூபகம்:

பல்லவி.

வாரும் மயிலேறிய துய்யா வடிவேலய்யா (வாரும்)

அநுபல்லவி

தாரும் வரமெனக்குத் தயங்கினேன் கலி தீர (வாரும)

சரணங்கள்.

வேறுனையன்றி யெனக் காருமில்லையே தஞ்சங்
கூறுமெனக் கருளைத் தீருமென்று பஞ்சங்
கோலனே வடிவேலனே உமை
பாலனே வுயர் லோலனே வுனைக்
கோரினே னகங் தேறினேன்
துயர்மாரினே னருள் மீரினேனேடி (வாரு)
ஆறுமுகனே தேவா அய்யா யெந்தனைக்காவா
மீறும் வினையைத் தீர்வா மெய்யா வருள் தருவாய்
மேதினிதனி லோதினேன் யிப்
போதினில் சாமிதாசனுக் கருள்
மெய்யனே பன்னிரு கையனே
சிறுமையனே யாளும் மெய்யனே வோடி (வாரு)

6. விருத்தம்.

பத்தரை மாத்துள்ள பசுந்தங்க மான
பாதமதை யானடியே னித்த நித்தம்
நித்திரையிலும் நினைந்தேன் மகிழ்ச்சி யாக
நெஞ்ச மிரங்காத பெரும் வஞ்சமாமோ
பித்தரைப் போற்குளரி மிகப் பாடியாடி
பெரும்பாலு முந்தனையே தஞ்ச மென்றேன்
இத்தரையோர் பணிகின்ற செந்தூர்க் கந்தா
எழியேனுக் கெந்நாளு மருள் செய்வாயே..

7. பூமி மெச்சிடு மென்ற மெட்டு.

இராகம் - தேசிகம் - முகாரி - அடதாளம். கண்ணிகள்.

பாதிமதியணி ஆதிசிவ னருள்ப் பாலனே
வுமை சீலனே வடிவேலனே யிந்தப்

பாரின்மீது மயிலேறி வந்தென் முகம்
பாராயோ கலி தீராயோ. 1

சோதிச் சுடரொளி யாகச் செந்தூர் வளர் சுத்தனே
ஞானமுத்தனே சிவ சித்தனே என்றும்
மேதினியில் ராச நீதி மன்னர் தொழும்
மெய்யனே காரு மய்யனே. 2

பண்டுவினை தீருமென் றுனையே நிதம் பாடினேன்
கவி சூடினேன் றுதிநாடினேன் கண்ணால்
பாருமே யருளைத் தாருமே யுனது
பக்தனைக் காரு மத்தனே. 3

வண்டு கெண்டை விழிவள்ளி தெய்வானையின் ஆளனே
மணவாளனே வுயிர்த் தோழனே வோடி
வாருமே கிருபை தாருந் தமிழ்ச் சாமி
தாசனைக் காத்த வாசனே. 4

Q26·417 N46

8. இராகம் - தேசிக தோடி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

வேலனே யிந்த வேளை வந்தருள் புரிவாய் கானில்
விளைவாகிய தினை காவல்கள் புரியுந்திரு குறமாதுடன்
வேளை வந்தருள் புரிவாய்

அநுபல்லவி.

பாலனுனைத் துதித்தேனே மலர் கொண்டு
பரிபூரண கிருபாகர குருநாதனே திறமோடிந்த (வேளை)

சரணங்கள்.

தாமித மேனின்னம் நீயெனக் கருள் தா
பூமியோர் போற்றிப் புகழுந் தயாநிதா
சாமிதாசன் தொழுஞ் சத்திவேலா யுதா
சஞ்சலமா நெஞ்சமதில் தஞ்சமென்றேன் பஞ்சையிந்த (வேளை)

எந்த நேரந்துதி சிந்தையில் தேடியே
வந்தனஞ் செய்தேனே கந்தா முன் கூடியே
பந்தவினைகளைத் தீர்த்திடாய் நாடியே
பாருந் துயர் தீருமருள் தாரும் கல்வி சேருமிந்த (வேளைவந்)

9. நொண்டிச் சிந்து

மானிலந்தனில் சிறந்த—செந்தி நகர்—மால் மருகனுனவுயர் வேல் முருகனே—நானிலத்தோர்கள் புகழ்-வள்ளியம்மை - நாயகி தெய்வானை மகிழ் நேயலோலனே—பக்தியுடன் நானடியேன் உன்னுடைய — பாதமதில் மலர்பெய்து நீதமுடனே - நித்திரையிலும் நினைந்தேன்-யென்னுடைய — நெஞ்சமதி லேயிருக்குஞ் சஞ்சலந்

திராய்-எத்தொழிலைப் புரிந்தாலும்-தனிவழி—யேகினுலுங்கிருபை
ஆகிடவேணும்—முத்தமிழருணகிரியார்-கவிக்கன்று-மொழிந்தனை
யே அருளைத் தெளிந்தனையே-சித்தம திரங்கவேணும்-யிந்த -செ
கத்தோர்களு மதித்துப் புகழவேணும் - மெத்தநலந் தருவாயே
சாமிதாசன்—மேன்மையான யின்பரசப் பதம்பாடினேன். (தெந்)

10. பழனியாண்டவனே என்ற மெட்டு.

இராகம் - தோடி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

செந்தூராண்டவனே உனதிரு
செம்பொற்பதமதை யனுதினம்
நம்பித் துதியது மனதினிஞ்
சேவித்திடு மன்பர்க்கருள் பாவித்திடு மின்பத் திருச் (செந்)

அநுபல்லவி.

அந்தநாள் தந்தைக் கருளுரைத்தவா
அசுரர் கிளைகளடித் தறுத்தவா
அந்தரி சுதனனவா தேவா
ஆறுமுக சீலனென வீர சூர வேலனென
அருளே செந்தூர் வாழ்தி செயப்
பொருளே புவியோர் துதி செயும்
மாதியே யெங்கும் நிறைந்த சோதியே குணமுறைந்த
அய்யனே மெய்யனே துய்யனே
கையனே னபயனையா ளருள் (செந்தூர்)

சரணங்கள்.

கும்ப முனிவர் கின்றுங் குருவே
குவலயம் புக ழென்றும் மருவே
நம்பு மன்பர்க் கருளுந் திருவே
நாதா புகழ் நீதா மறை வேதா வரந் தாதா யுரை
நானே யனுதின முனை நினைந்தேனே யருளரி திருமரு
கோனே பெருமானே நறுந்தேனே மனந்தானே யிரு
கொண்டேன் சாமிதாசனுக் கரு
ளென்றுஞ் சுவாமியே யெனக் கருள்
கோலாவுயர் வேலாவுமை பாலாவருள் சீலாதிருச் (செந்)

11. கூடினேமே யிருபேரு மொன்றாகவே என்ற மெட்டு.

இராகம் — காப்பி — தாளம் — ரூபகம்.

தேடினேனே வுந்தன் பாதர விந்தந்
தெரிசனந் தந்தாள் சிமானே திருச்
செந்தூரில் வாழ் முருகோனே வுயர்
தேசிகனே மயில் வாசிகனே

தேவர் குருவோனே யாவர் பெருமானே
ஆவலுடனே யுனது சேவடியைப் போற்றிட யான் (தேடி)
நாடித் தேடியுனைப் பாடித் துதித்துமே
நம்பினேனே மனங்கொண்டு தினம்
வெம்பினேனே கனதொண்டு உனை
நான் கனிந்தேன் நிதமே பணிந்தேன்
நாதா மறை வேதா நீதா யிது சூதாய்
போதா மலர்ப் பாதா யெனக் காதரமே தாதா நிதம் (தேடி)
ஆதியிலந்த அசுரரை வென்று
அடைந்தீர் தேவர் பதி சென்று நின்று
அண்டம் புகழ்ந்திட நின்று மென
தாண்டவனே அன்பு பூண்டவனே
அய்யனே நீ தேவா மெய்ய நீகாவா
செய்யும் மருள் தாவா சிறுபையனே யாள்வா மிகவுந் (தேடி)
செந்தூரில் வாழருள்க் கந்தனென்றுனுனைச்
சேவிப்பவர் கோடா கோடி நிதங்
கூவித் துதிப்பார்களோடி கல்வி
சேருமென்பார் செல்வ மூருமென் பார்
சேயன் சாமிதாசன் நேயன் றுதி வாசன்
செந்தமிழ்க் கருள் சிறந்து யிந்தவேளை காருகந்து. (தேடி)

12. மன்னு உமைப் பிரிய என்ற பிரிவு காண்ட மெட்டு.

இராகம் - முகாரி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

வா வா வடிவேலனே நிதம் வா வா வடிவேலனே அந்த
வள்ளி தெய்வ யானையோடு புள்ளி மயிலேறி யென்முன் (வா)

அனுபல்லவி.

தேவாதி தேவனே தினமுந் துதித்தேனே
காவா யெனது கவலை யகற்றிட (வா)

சரணங்கள்.

சூரசம்மாரனே வா அசுரர்சூரசமமாரனேவா வெகு
சுந்தரமா யிந்தவேளை யுந்தனைப் பணிந்தே னதி (சூர)
பாரிலுள்ளோர்க் கருள் பன்னிருகை வேலா
வீராதி வீரனே வெற்றி வேலய்யா நீ (வா)
செந்தூர் வாழ் கந்தய்யா வா திருச்
செந்தூர் வாழ் கந்தய்யா வா அருள்
சேவடி தனையே நாடி
யாவலாய்ப் போற்றினேன் தேடி (செந்தூர்)
அந்தரத் தோர்புக ழய்யா முரு கய்யா
செந்திருவாம் மந்த சேயிளைமாருடன் (வா

வந்தெனக் கருள் புரிவா வேரடி
வந்தெனக் கருள் புரிவா சக்தி
வடிவேலனே கொடிதாகிய
கலி நீங்கிட யிது வேளை நீ [வந்தெ
அந்தமூல களந்தானவன் மருகா
அம்பிகையின் பாலா சம்பிரம மதாகவே (வா)
பூமியோர் போற்றுந் தேவா யிந்தப்
பூமியோர் போற்றுந் தேவா வுந்தன்
பொன்னடி தனையே நாடி
நன்னயமாகத் தேடி (யிப்)
காமத மின்றியருள் செய்குவா யந்தச்
சாமிதாசன் பணிவோனே யருள்தர (வா)

17706

13. சஞ்சலமா நெஞ்சமிக வுழன்றேனே என்ற மெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஆதி.

பல்லவி

நெஞ்சமதி லனுதினம் நினைந்தேனே நின்
தஞ்சமென செஞ்சரணம் அடைந்தேனே சுவாமி

அனுபல்லவி

வஞ்சக நமனூர் தாது மிஞ்சிவரு முனம் உனை (நெஞ்)
காவனத்தி லேதனித்த மயில்போலே தண்ணீர்
தாவளத்தினில்தொனித்த குயில்போலே சுவாமி(நெஞ்)
தேவரிடுக்கமதைமுன் தீர்த்தோனே உந்தன்
தெரிசனம்வந் தவரைக்கண் பார்த்தோனே சுவாமி(நெஞ்)
தந்தைக்குப தேசமொழி யுரைத்தோனே அந்தத்
தார்வனத்தில் வள்ளிமனங் கரைத்தோனே சுவாமி(நெஞ்)
அருணகிரியார்க்கருளா நின்றோனே யிது
தருணஞ்சாமிதசனுக் கருள்தானே சுவாமி(நெஞ்)

14. ஆதிமூலமான விக்கினேஸ்பரு நமோவென்ற மெட்டு

இந்துஸ்தான் - பியாக்கு - தாளம் - சாப்பு.

செந்திநகர் சந்நிதியில் விநாயகர்க்கு மங்களம்
சேவல்கும ரேசன்வள்ளி தெய்வானைக்கும் மங்களம்
சந்ததம் மருள்புரி சரஸ்பதிக்கி மங்களம்
சதுர்முக னரிசிவன் சகலவர்க்கு மங்களம்
கூடுஞ்சபை யோர்க்குங் கொற்றவர்க்கு மங்களம்
கோற்குலம்போல் பாடுகின்ற புலவரதி மங்களம்
பாடிப்படித்தவர்க்கும் பாவலர்க்கு மங்களம்
பாலன்சாமி தாசனுக்கு மங்களமா மங்களம்.

இன்பரசக் கீர்த்தனைப் பதங்கள் முற்றிற்று.